# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No.113/2022 | Date : 19.09.2025 | PW 1 |
|---|---|---|
| Name: விஜயா | க/பெ.ஆனந்தன் | |

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மல்லிகுந்தத்தில் குடியிருக்கிறேன். எனது மகள்கள் இரண்டு பேருக்கும் திருமணமாகிவிட்டதா என்றால் எனக்கு ஒரு மகள்தான் அவருக்கு திருமணமாகிவிட்டது. எங்கள் ஊரில் இருந்து ஒரு மைல் தூரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். என் மகளுக்கு திருமணமாகி சுமார் 10 வருடம் இருக்கும். எனது மகள் அவரது கணவர் வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழில் இறந்துபோன மகனுக்கு நான் மட்டும் தான் வாரிசு என்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மகன் வீட்டிற்கு ஒயரிங் செய்யும் வேலை செய்து வந்தார். என் மகன் 10 ம் வகுப்பு வரை படித்திருந்தார். ஒயரிங் செய்வதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தானது 1ம் எதிர்மனுதாரா அஜாக்ரதையாலும் அதிவேகமாக வந்து மோதியதால்தான் விபத்து ஏற்பட்டதாக கூறி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையிலும் சுந்தரராஜனின் அஜாக்ரதையால்தான் விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுந்தரராஜன் வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமமும் காப்பீடும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருபபதற்கும், வாகனத்திற்குகாப்பீடு இருப்பதற்கும் நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் எனது மகன் வைத்திருந்த வாகனத்தின் காப்பீட்டாளர் என்றால் அது பற்றி தெரியவில்லை. விபத்து சம்மந்தமாக என் மகன் வைத்திருந்த வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்திற்கு சென்று கோரிக்கை மனு கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய மகன் விபத்தில் இறந்ததற்கு 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும் அஜாக்ரதையாலும் இறந்ததால் 1ம் எதிர்மனுதாரர்தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரிதான். நான் 2ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள நஷ்டஈடு மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

ஒம்/–விஜயா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– R. சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.